**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 166/2021**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.11.2025 | | |
| பெயர்: | வீரப்பன்<br>(PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | சின்னதம்பி |
| கிராமம்: | ஆச்சாள்புரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | உதவி தொடக்க கல்வி அலுவலர் ஓய்வு. | வயது : | 70/2025 |

**<u>முதல் விசாரணை : 24.11.2025</u>**

நான் இவ்வழக்கின் 1–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 27.10.1982–ம் தேதியிட்ட தாவா முதல் அயிட்ட சொத்தை பொறுத்து 2–ம் வாதிக்கு ஜெயராமன் வகையறா எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தின் அசல் (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **வா.சா.ஆ 1** ஆகவும்,

2. 11.05.1998–ம் தேதியிட்ட தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து எனது பெயருக்கு குஞ்சு அவர்கள் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திர அக்ரிமெண்டின் அசல் (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **வா.சா.ஆ 2** ஆகவும்,

3. தாவா 1–வது அயிட்ட சொத்திற்கான வரி கட்டிய ரசீது (எண்ணிக்கை –18) **வா.சா.ஆ 3** ஆகவும்,

4. தாவா 2–வது அயிட்ட சொத்திற்கான குத்தகை வரி கட்டிய ரசீது **வா.சா.ஆ 4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.